Tamil Medium

# 11 TNPSC GROUP II / IIA MAINS SCERT - SCIENCE & TECHNOLOGY QUESTION WITH ANSWER

**11. "இந்திய உயிர்புவி மண்டலங்கள்" பற்றி குறிப்பு வரைக.**

**இந்திய உயிர்புவி மண்டலங்கள் :**

- "தட்ப வெப்பம், தாவரங்கள், விலங்கினங்கள் மற்றும் ஆகியவற்றின் அடிப்படையிலான சர்வதேச உயிர் குழும வகைபாட்டின் அடிப்படையில் இந்தியா 10 உயிர் புவி மண்டலங்களாக பிரிக்கப்படுகிறது".

**1. இமய மலைக்கு அப்பால் உள்ள மண்டலங்கள் :**

- பரப்பு : 5.7%
- லடாக்கின் மலைப்பகுதி, சிக்கிம் வடபகுதிகள் மற்றும் ஹிமாச்சலின் சில பகுதிகள்.
- உயிரினங்கள் : ஆல்பைன் புல்வெளி தாவரங்கள், உலகில் அதிக அளவிலான காட்டு செம்மறி ஆடுகள்.

**2. இமயமலை (7.2%) :**

- வடமேற்கு இந்தியா முதல் வடகிழக்கு இந்தியா வரையிலான முழு நீள மலைத்தொடர்
- ஆல்ஃபைன் காடுகள், ஆர்க்கிட்டுகள்

**3. இந்திய பாலைவனம் (6.9%) :**

- குஜராத் உப்பு பாலைவனம் & ராஜஸ்தானின் மணல் பாலைவனத்தை உள்ளடக்கிய பகுதி.
- ஆரவல்லி மலைத்தொடரின் மேற்கு வறண்ட பகுதி.
- முட்காடுகள், இலையுதிர் காடுகள்

**4. குறை - வறட்சி மண்டலம் (15.6%) :**

- இந்திய பாலை வனப்பகுதிக்கும் தக்காண பீடபூமிக்கும் இடைப்பட்ட பகுதி.
- ஆரவல்லி மலைத் தொடர் உள்ளடக்கியது.
- முட்புதர் காடுகள், இலையுதிர் காடுகள், ஓநாய்

SURESH

**5. மேற்கு தொடர்ச்சி மலை (4%) :**

- தெற்கு குஜராத்தில் இருந்து கேரளாவின் தென்முனை.
- பசுமை மாறாக் காடுகள், வறண்ட இலையுதிர் காடுகள், நீலகிரி வரையாடுகள்.

**6. தக்காண தீபகற்பம் (43%)**

- சாத்புரா, மேற்கு தொடர்ச்சி மற்றும் கிழக்கு தொடர்ச்சி மலைகளுக்கு இடைப்பட்ட பகுதி.
- இலையுதிர் காடுகள், முள்காடுகள், குரைக்கும் மான், யானை, தேன்கரடி.

**7. கங்கை சமவெளி (11%) :**

- கிழக்கு ராஜஸ்தான் முதல் பீகார் வரை
- சதுப்பு நில, வறண்ட இலையுதிர் காடுகள்
- யானை, புலி, சதுப்பு நில மான்கள்

**8. வடகிழக்கு இந்தியா (5.2%)**

- இமயமலை சாரா வடகிழக்கு சமவெளிகள்
- இந்தியா – இந்தோமலாய மற்றும் இந்தோ – சீன புவி மண்டலங்கள்
- உயிர் புவியமைப்பு வாயில் மற்றும் மிகை உயிர்ப்பன்மை
- சதுப்பு நிலக் காடுகள், புல்வெளிகள்

**9. கடற்கரையோர மண்டலம் (2.5%) :**

- குஜராத்திலிருந்து சுந்தரவனம் வரை
- சதுப்பு நிலத் தாவரங்கள், கடற்பஞ்சுகள், அலங்கார மீன்கள்

**10. அந்தமான் & நிக்கோபார் (0.3%) :**

- பசுமை மாறாக் காடுகள்
- பவளங்கள்
- இராட்சத கொள்ளை நண்டுகள்
- கட்டு விரியன் பாம்புகள்



SURESH'